**இலங்கை கலைக் கழகம் -2022**
**-------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கலைக் கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கழகத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா

என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள்**

| குறித்த நியமத்தின் தொடர்புடன் கூடிய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 15 இன் 14 பந்தி பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பாதீட்டுப் பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதிக்கிடையில் இணக்கஞ் செய்தல் உள்ளடக்கி அல்லது பாதீட்டுப் பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதிக்கிடையிலான பொருண்மையான வித்தியாசத்திற்கு காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை. | பாதீடு தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இருந்த நிறைவேற்று சபைக்கு பதிலாக 2022 நவம்பர் மாதத்தில் புதிய நிறைவேற்று சபையொன்றை நியமித்தமை இதற்கு காரணமானது. | நியம ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த கணக்கு தீர்பனவாக ரூபா 61,469 பெறுதமி பரீட்சை மீதியில் செலவில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும், பேரேட்டின் பிரகாரம் அவ்வாறான கணக்கொன்று இருக்கவில்லை. மூலதனத்தின் மீதான மாற்றல் கூற்றிற்கு ரூபா 22,281 அளவு செம்மையாக்கப்பட்டிருந்த போதும், அதனை கணக்கிட்ட விதம் மற்றும் அவ்வாறு உள்ளடக்கிய காரணம் விளக்கப்படவில்லை. | பரீட்சை மீதி ஊடாக சீராக்கி சமர்பிக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமானங்களை சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டிற்காக நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 103,316 ஆன போதும் நிதி செயலாற்றல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 25,000 ஆக ரூபா 78,316 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 திகதிக்கு பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 92,179 ஆன போதும் நிதி நிலைமை கூற்றில் அப் பெறுமதி ரூபா 15,000 ஆக ரூபா 77,179 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இங்கு ஏதேனும் தவறுகள் இருப்பின் 2023 கணக்கறிக்கை சமர்ப்பிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 ஆண்டிற்காக உரிய பணிக்கொடை செலவு ரூபா 43,458 ஆன போதும், அது ரூபா 70,960 ஆக நிதி செயலாற்றுகை கூற்றிற்கு செம்மையாக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா 27,502 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பரீட்சை மீதி ஊடாக சீராக்கி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை ரூபா | சமர்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| வெளியீடுகள் இருப்பு | 1,175,483 | கலா சஞ்சிகை – 2014 செப்டம்பர் பகுதிக்கு மற்றும் திசெம்பர் பகுதிக்குரிய அலகுக் கிரயம் மற்றும் புத்தர் சிலை நிர்மாணக் கலை எனும் வெளியீட்டிற்குரிய அலகு விற்பனை விலையும் குறிப்பிடப்படாததால் 2022 திசெம்பர் 31 திகதி நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்ட ரூபா 1,175,483 தொகையின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | 2023 ஆண்டில் கணக்கறிக்கை சமர்பிக்கும் போது இத் தவறை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| வளவாளர் படிகள் | 270,000 | சாந்திக் கர்ம 02 நிகழச்சித் திட்டங்களிற்காக கூட்டுத் தொகை ரூபா 210,000 மற்றும் நடன பயிற்சிப் பட்டறைக்கு 03 கலைஞர்களுக்கு ரூபா 60,000 வும் செலுத்தப்பட்டிருந்தது. இக் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே வளவாளர் படிகள் செலுத்த பொது முயற்ச்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொண்டதற்கான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | இப் பயிற்ச்சி பட்டறைக்கு தொடர்புபடும் வளவாளர்கள் விடய நிபுணர்கள் ஆவதுடன் காணப்படும் அரச சுற்றறிக்கை கொடுப்பனவின் கீழ் அவர்களின் சேவையை பெற்றுக் கொள்வதில் கடினம் ஏற்பட்டுள்ளது. | படிகள் செலுத்த பொது முயற்ச்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1952 இன் 18 இலக்க இலங்கை கலைக் கழக சட்டத்தின் 12 ஆம் பிரிவு | ஆலோசனை சபை கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களின் | ஆலோசனை சபை கூட்டத்தில் முன்னேற்றம் மற்றும் பின்னூட்டல் செய்ய | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னேற்றத்தை கழகத்திற்கு சமர்பித்திருக்காததுடன் கழகமும் அது தொடர்பாக பின்னூட்டல் செய்திருக்கவில்லை. அவ்வாறே, ஆலோசனை சபையின் செயற்பாடுகள், கடமைகள் மற்றும பொறுப்புக்கள் தொடர்பாக சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. | தேவையான நடவடிக்கைகளை முறையாக கட்டுப்படுத்த நிறைவேற்று சபையின் ஒருமைப்பாடு ஏற்பட்டது. | வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 445(i) | தனிநபர் சம்பளப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டில் கணக்கறிக்கை சமர்ப்பிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 264(i) | மூன்று வேலைத் திட்டங்களிற்காக கூட்டுத் தொகை ரூபா 72,300 செலவிடப்பட்டிருந்ததுடன் அச் செலவுகளிற்கு பட்டியல் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரியான விதத்தில் செயற்பட தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 842 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | கழகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை. | 2023 ஆண்டில் கணக்கறிக்கை சமர்ப்பிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 369,171 ஆன பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,176,242 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,807,071 ஆன வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிக்கு நிர்வாக மற்றும் தாபன செலவுகள் ரூபா 6,108,331 இனால் மற்றும் பயிற்ச்சி பட்டறை, நிகழ்ச்சித் திட்ட செலவு மற்றும் நிதி அனுசரணை வழங்கல் செலவு

ரூபா 2,222,062 இனால் மற்றும் மீண்டெழும் பெறுவனவு ரூபா 3,437,612 இனால் குறைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைதிறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாட்டின் அனைத்து கலாசார மத்திய நிலையங்கள், கலைநிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்களை தலைமையாகக் கொண்டு சங்கீதம், நடனம் மற்றும் நாடகம் ஆகிய விடய துறைகள் பிரதிநிதித்துவப்படும் வகையில் ஒரு துறையிலிருந்து அரங்கு உரை 02 வீதம் 06 செயலமர்வுகள் 2022 ஆண்டில் நடாத்த திட்டமிட்டிருந்த போதும், 5 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தி இருக்கவில்லை. | இப் செயலமர்வுகளுக்கு தொடர்புபடும் வளவாளர்கள் விடய நிபுணர்கள் ஆவதுடன் காணப்படும் அரச சுற்றறிக்கை கொடுப்பனவின் கீழ் அவர்களின் சேவையை பெற்றுக் கொள்வதில் கடினம் ஏற்பட்டுள்ளது. | திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கலைக் கழகத்தின் கீழ் 11 துணை கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ள போதும் அந்த 11 துணை கழகங்களின் மூலம் செயற்படுத்த வேண்டிய நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு திருத்திய செயல் நடவடிக்கை திட்டதிற்கு உட்படுத்தியிருக்காததால் ஆண்டினுள் அத் துணை கழகங்களினால் ஒவ்வொறு கலைத் துறையின் தேசிய பெறுமானம் பற்றி மக்களை அறிவூட்டல் தொடர்பாக அவர்களின் பங்களிப்பை வழங்கி இருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. | அனைத்து கருத்திட்டம் மற்றும் நிகழச்சித் திட்டத்திற்காகவும் துணை கழகங்களின் உதவி மற்றும் ஒவ்வொறு கலைத் துறைகளின் நிபுணர்களின் ஆலோசனைப் பிரகாரம் கருத்திட்டம் செயற்படுகிறது. | திட்டமிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்த வேண்டும். |